[1993 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(இ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 23/1993), மாண்புமிகு நிதி அமைச்சர்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1993)@ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்,''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

@ 29—4—1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது,

1993 ஏப்ரல் 30] [பேரவைத் துணைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகிறது,

பிரிவுகள் 2 முதல் 5 முடிய திருத்தங்கள் இல்லை,

பிரிவுகள் 2 முதல் 5 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்),

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை),

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

மாண்புமிகு நிதி அமைச்சர்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண், 23/1993) நிறைவேற்றப்பெற வேண்டும்,''

எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்),
மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை),
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது,

4. உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

(இ) உறுப்பினரால் பேரவைச் செயலருக்கு அனுப்பப்பெறும் முன்னறிவிப்பினைக் குறித்த செய்தியை முன்கூட்டியே 'தினகரன்' நாளிதழ் வெளியிட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன், எம்.எல்.ஏ. அவர்கள் 2—4—1993 அன்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தார், பேரவை விதி 36(5)இன்படி உறுப்பினரால் செயலருக்கு அனுப்பப்பெறும் முன் அறிவிப்பினைப் பேரவைத் தலைவர் அனுமதித்து உறுப்பினர்களுக்கு அனுப்பாதவரை அதனை உறுப்பினரோ அல்லது வேறு எவரோ வெளியிடக்கூடாது என்றிருப்பதைச் சுட்டிக் காட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரி தீர்மானம் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லப் பட்டு 2—4—1993 அன்று பத்திரிக்கைகளில் வந்திருப்பதாக உள்ளது, தன்னுடைய உரிமையை மட்டுமல்லாது அவையின் உரிமையையும் பாதிப்பதாக உள்ளதாகத் தெரிவித்து அச்செய்தி ''தினகரன்'' பத்திரிக்கையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் தெரிவித்ததாக உள்ளதால், எதிர்க்கட்சித் தலைவர் மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருவதாகவும் அவையில் விளக்கினார், இதுபற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது, 'I have not made it public and I will not make it public, என்றார், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இது பற்றிக் கூறும்போது. அந்தச் செய்தி எப்படிப் பத்திரிகைகளில் வந்தது என்பதை விசாரித்து அதற்குப் பிறகு யார் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரவேண்டுமென்று முடிவு எடுப்பது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள், நான் அவை முன்னவர் அவர்களின் ஆலோசனையை ஏற்று பத்திரிகையாளர்களை விசாரித்து அதன் அடிப்படையிலே முடிவு செய்யலாம் என்று அறிவித்தேன்,

இது தொடர்பாகப் பல்வேறு பத்திரிகைகளில் வந்திருந்த செய்திகளைப் பார்க்கையில் 'தினகரன்' பத்திரிகை மட்டும் இந்த அறிவிப்புத் தொடர்பான தகவல்களை திரு. எஸ். ஆர்